தேதி 21.11.2019

ஓ.எஸ்.46/11

பெயர் சந்திரா

டி டபிள்யூ. 1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை 8 மற்றும் 9வது பிரதிவாதி தரப்பில்

தாவா சொத்துக்கள் என்னுடைய கணவருக்கு பாகப்பிரிவினை மூலமாக கிடைத்த சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய கணவர் இறந்து போனபிறகு நான் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஒன்றாகத் தான் இருந்தோம். என்னுடைய கணவர் இறந்து போனபிறகு குடும்பத்தில் மூத்த மகன் என்ற முறையில் 2வது பிரதிவாதி தான் மேற்பார்வை செய்தார் என்றால் அது தவறு. என்னுடைய கணவருக்கு ஜானகி என்ற ஒரு மனைவி இருந்தார் என்ற சொன்னால் அது தவறு, அவர் மூலமாக என்னுடைய கணவர் கணேசனுக்கு ஜெயலெட்சுமி, விஜயசந்திரிகா, தமிழ்செல்வி ஆகியோர் குழந்தைகள் பிறந்தார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என்னை என்னுடைய கணவர் கணேசன் ஜாதி முறைப்படி விவாகரத்து செய்து கொண்டார் என்றால் தவறு. எனக்கும் என்னுடைய கணவருக்கும் இடையே என்னை அவர் விவாகரத்து செய்ததாக ஜானகி அறந்தாங்கி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 153/91 தாக்கல் செய்யப்பட்டு அதன் பிறகு மேல்முறையீடு புதுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் 34/93 பிறகு 2வது மேல்முறையிடானது சென்னை உயர்நீதிமன்றத்தில் 729/95 ஆகிய வழக்குகள் நடந்தது உண்மை தான். நானும் என்னுடைய மகன் செந்தில்குமாரும் சேர்ந்து அமிர்ந்தலிங்கம் என்பவரும் தாவா 3வது இலக்க சொத்தை கிரையம் கொடுத்தார் என்று சொல்லி ஒரு கிரையப்பத்திரம் ஏற்பட்டுத்தினர் அதை நான் பயந்துக்கொண்டு கையெழுத்து போட்டேன். நான் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்று தான் கையெழுத்து போட்டேன். அது ஏற்பட்ட ஆண்டு 1992 என்றால் சரிதான். நான் அந்த பத்திரத்தை நான் ரத்து செய்வதற்கு இது நாள் வரை வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை. 2011 ஆண்டில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. என்னுடைய மகன் அவருடைய வழக்கை நான் ஒப்புக்கொண்ட பிறகும் கூட அந்த கிரையப்பத்திரத்தை ரத்து செய்வதற்கு நான் இது நாள் வரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகளுக்கு இந்த கிரையம் பற்றி விபரம் கேள்வி பட்டு தெரிந்து கொண்டார்கள். என்னுடைய கணவர் இறந்து போன பிறகு நான் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஒரே குடும்பாக இருந்தோம் என்றும் அப்போது தான் குடும்பத்திற்காக தாவா 3வது இலக்க சொத்தை மேலே சொல்லப்பட்ட அமிர்த்தலிங்கத்திற்கு கிரையம் கொடுத்தோம் என்றால் தவறு. திருமணத்திற்கு பிறகு வாதிகள் மற்றும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் அவரவர் கணவரோடு குடியிருக்கின்றார்கள். தாவா சொத்துக்கள் அனைத்தையும் நான் செல்வமாணிக்கம், செந்தில்குமார்

மேற்பார்வை செய்தோமா என்று கேட்டால் நான் தான் மேற்பார்வை செய்து வந்தேன். அமிர்ந்தலிங்கம் கிரையம் வாங்குவதற்கு முன்பாக இந்த சொத்தானது பொதுக்குடும்ப நலனுக்காக விற்பனை செய்யப்படுகின்றது என்று விசாரித்து தெரிந்து கொண்டு நல்லஎண்ணத்தின் அடிப்படையில் தான் கிரையம் வாங்கிருக்கின்றார் என்றும் இப்போது வாதிகளோடு சேர்ந்து கொண்டு நானும் உண்மைக்கு புறம்பாக வழக்காடுகின்றேன் என்றால் தவறு. அறந்தாங்கி நீதிமன்றத்தில் ஒஎஸ் 209/14 என்ற வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு இந்த வழக்கிற்கு வலுஊட்டுவதற்காக நான் தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் தவறு. அந்த வழக்கின் ராமு மற்றும் சரஸ்வதி ஆஜர் ஆகி வழக்கை நடத்திவருக்கின்றார்கள். வாதிகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு மோசம் செய்யும் நோக்கத்தோடு நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் தவறு.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.